காவல் துறை, தீயணைப்புத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை ஆகிய மூன்று துறைகளின் மீதான விவாதம் தொடங்கி, பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வின் சார்பில் விவாதத்தை சேகர்பாபு தொடங்கி வைத்து, ஆளுங்கட்சியின் சார்பில் உதயசூரியனும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் அம்மையார் திருமதி யசோதா அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் ஜி.கே.மணி அவர்களும், சி.பி.எம். சார்பில் செல்வி. பாலபாரதி அம்மையார் அவர்களும், சி.பி.ஐ. சார்பில் வை. சிவபுண்ணியம் அவர்களும், ம.தி.மு.க. சார்பில் வீர. இளவரசன் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கு.செல்வம் அவர்களும், புரட்சி பாரதம் சார்பில் ஜெகன் மூர்த்தி அவர்களும், மீண்டும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கரி.இராமசாமி அவர்களும் நேற்று, அ.தி.மு.க. சார்பில் கலைராஜன் அவர்களும், இன்றைய தினம் தி.மு.க. சார்பில் குத்தாலம் அன்பழகன் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் அதன் சட்டமன்றத் தலைவர் சுதர்சனம் அவர்களும், அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களும் ஆக மொத்தம் 14 பேர் உரையாற்றியிருக்கிறார்கள்.

## மறப்போம் மன்னிப்போம் என்று சொன்ன தலைவருடைய தம்பிகள் நாங்கள்

பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் இறுதியாக ஒரு எச்சரிக்கை விடுத்தார், அம்பை எய்துகின்ற வில்லில் நாணாக இருக்கின்ற நீங்கள் நாணை ஏற்றி அறுத்துவிடாதீர்கள் என்று சொன்னார்கள். நான், நாணையும் அறுத்துவிடமாட்டேன்; நானும் அறுந்துபோக விடமாட்டேன் என்பதை நான் என்னுடைய பழைய நண்பர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவர்கள் அடுக்கிக் காட்டினார்கள், குற்றங்களை யெல்லாம், இவ்வளவு குற்றங்களுக்கு என்ன பதில் சொல்கிறீர்கள், என்ன பதில் சொல்கிறீர்கள் என்று குற்றங்களையெல்லாம் அடுக்கிக் காட்டினார்கள். குற்றங்கள் பரிமாறிக் கொள்ளப்படுவது, இதுபோன்ற காவல் துறை மானியங்களில் எதிர்க்கட்சியும், ஆளும் கட்சியும் இயல்பாகவே கடைப்பிடிக்கின்ற ஒன்றுதான்.

இதற்கு என்ன பதில் என்று எதிர்க்கட்சி கேட்பது, அதற்கு பதில் அளித்துவிட்டு ஆளுங்கட்சி இதற்கு என்ன பதில் என்று இவர்கள் கேட்பது, இப்படிப்பட்ட கேள்வி பதில்கள் பட்டிமன்றங்களாக மாறி நாம் இந்தத் துறையின் மூலமாக என்ன செய்யப்போகிறோம் என்பதைப் பற்றி விவாதிப்பதையே, விட்டுவிடுகிறோம். அதுதான் பெரிய துரதிருஷ்டம் என்று பழைய பாணியிலே சொல்ல வேண்டும்.

உழவர்களைப் பற்றி மானியம் என்றால் அந்த உழவர் களுடைய கஷ்ட நஷ்டங்கள், அவர்களுடைய தேவைகள், அவர்களுக்கு ஏற்படுகின்ற இயற்கைச் சீற்ற பாதிப்புகள் இவற்றை எடுத்துச் சொல்லி அவர்களுக்கு இழப்பீடு தர வேண்டும், அவர்களுக்கு ஏற்பட்ட விபத்துகள், தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற விபத்துக்கள் அதற்கெல்லாம் நிவாரணம் அளிக்க வேண்டும். அவர்களுக்கு, விவசாயத்தை நம்பியிருக்கிற அந்த மக்களுக்கு அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று அவர்களுக்கு ஆதரவு தருகிற அரசாக இந்த அரசு இருக்க வேண்டும் என்று பேசுவதுதான் எதிர்க்கட்சி யினுடைய பணியாகவும், ஆளுங்கட்சியினுடைய பணியாக வும் இருக்கும்.

ஆனால் பிரதான எதிர்க்கட்சியின் சார்பிலே குறிப்பாக அ.தி.மு.க.வின் சார்பிலே பேசிய நண்பர்கள் யாருடைய மானியமோ அந்த போலீஸ்காரர்களையே, காவல் துறை நண்பர்களையே தாக்கிப் பேசுகிற ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

காவல் துறை என்பது ஒரு பொதுவான துறைதான். அது நாங்கள் ஆட்சியிலே இருந்தாலும் எங்களுக்குக் கட்டுப்பட்ட துறை. நீங்கள் ஆட்சியிலே இருந்தாலும் உங்களுக்கு கட்டுப்பட்ட துறைதான். நாங்கள் ஆட்சியிலே இருந்து நள்ளிரவிலே போய் இன்னாரை கைது செய் என்று சொன்னால் அவர்கள் செய்துதான் தீர வேண்டும். வேறு வழியில்லை. வேண்டுமானால் மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு எங்களிடத்திலே வந்து மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கேட்டு மறப்போம், மன்னிப்போம் என்று சொன்ன தலைவருடைய தம்பியாயிற்றே, ஆகவே மன்னித்து விடுவார்கள் என்ற நம்பிக்கையோடு மன்னிப்பைப் பெற்றவர்களும் உண்டு (மேசையைத் தட்டும் ஒலி).

நான் அந்த விவரங்களுக்கெல்லாம் சென்று இந்த விவாதத்திலே; எந்தச் சூடு இதிலே கூடாது என்று கருதினேனோ, எத்தகைய உஷ்ணம் இந்த விவாதத்தின் மூலம் இந்த மாமன்றத்திலே பரவக் கூடாது என்று எண்ணினேனோ, எத்தகைய எரிச்சலும், கொதிப்பும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய உள்ளங்களில் , யாருடைய உள்ளத்திலும் இந்த விவாதத்தால் ஏற்படக் கூடாது என்று எண்ணினேனோ அதற்கு மாறாக அதற்கு வழி வகுத்துவிடக் கூடாது என்பதற்காக அந்த விவரங்களுக்குள்ளே எல்லாம் நான் செல்ல விரும்பவில்லை.

நம்முடைய பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் பேசும்போது ஒவ்வொன்றாகச் சொல்லி இதற்கு என்ன சொல் கிறீர்கள். இதற்கு என்ன சொல்கிறீர்கள், ஏன், ஏன், ஏன் என்று கேட்டார்கள். நான் அந்தக் கேள்விகளை ரசிக்கின்றேன். கேட்ட முறையை, அந்தக் கேள்விகளிலே உண்மை இருக்கிறதா, அல்லவா அது ஆராய்ச்சிக்குரிய விஷயம். அந்தக் கேள்விகளுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசால் பதிலளிக்க முடியுமா? முடியாதா? அது எல்லோருக்கும், பொது மக்களுக்கும் தெரிந்த விஷயம். உண்மையில் நடந்தது என்ன? இவர் பேசுவது என்ன என்பதை மக்கள் புரிந்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் நான் அவருக்குச் சொல்ல விரும்புகிறேன். ஏட்டிக்குப் போட்டியாக குற்றங்களைச் சொல்லிக் கொண்டிருந்தால் நேற்றைய தினம்கூட, நம்முடைய அருமை நண்பர் பாபு அவர்கள் பேசும்பொழுது சென்ற ஆண்டு குற்றங்களை விட திமுக. ஆட்சியில் இந்த ஆண்டு குற்றங்கள் அதிகம் என்று சொன்னார்.

ரொம்ப தந்திரமாகப் பேசினார். அதைத்தான் எதை ஒப்பிட வேண்டுமோ அதை ஒப்பிட்டார். சென்ற ஆண்டுக்கும், இந்த ஆண்டுக்கும் என்ன வித்தியாசம்? அதைவிட இந்த ஆண்டு ஆயிரமோ, ஐநூறோ அதிக குற்றங்கள் என்று சொன்னார். ஆனால் அவர் அதே கணக்கை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 3 ஆண்டுகளுக்கு முன்பு என்ன என்று சொல்லியிருந்தால் மாட்டிக்கொண்டிருப்பார், அவரா மாட்டுவாரர்? எனக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் அந்தக் கணக்கை 4,5 ஆண்டு கால கணக்காக எடுத்துக் கொள்ளாமல், சென்ற ஆண்டு, இந்த ஆண்டு என்ற அந்த ஒப்பீட்டை மாத்திரம் இங்கே செய்து, சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு தி.மு.க. ஆட்சியிலே குற்றங்கள் கொஞ்சம் அதிகம்தான் என்று சொன்னார்.

இதை பொதுவாக பரந்த நோக்கத்தோடு பார்க்க வேண்டும். சென்ற ஆண்டு, இந்த ஆண்டு என்று குறுகிய நோக்கத்தோடு பார்த்தால், அதிலே பயன் இல்லை. பரந்த நோக்கத்தோடு இதைப் பார்க்க வேண்டும், மொத்தத்தில் தி.மு.க. ஆட்சியிலும், அ.தி.மு.க. ஆட்சியிலும் கடந்த 4 , 5 ஆண்டுகளில் நடைபெற்ற குற்றங்களின் எண்ணிக்கை எவ்வளவு? அந்தக் குற்றங்கள் கொலைக் குற்றங்களாக, கற்பழிப்புக் குற்றங்களாக, கொள்ளைகளாக, களவுகளாக, பகற் கொள்ளைகளாக, சாலைக் கொள்ளைகளாக, இப்படியெல்லாம் எத்தனையோ குற்றங்கள் இருக்கலாம். அப்படிப்பட்ட அந்தக் குற்றங்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், நீங்கள் இந்த அளவிற்கு ஆத்திரப்பட்டு ஏன், ஏன், ஏன் என்று கட்டபொம்மன் நாடகத்திலே சிவாஜி குரல் எழுப்புவதைப்போல், பொள்ளாச்சி நண்பர் குரல் எழுப்பியிருக்க வேண்டிய தேவையில்லை. நான் உள்ளபடியே ரசித்தேன் அந்தப்பேச்சை அந்த ஏன், ஏன் என்ற அந்த கம்பீரமான வார்த்தை இருக்கிறதே, அதை ரசித்தேன். வார்த்தையிலே கம்பீரம் இருந்தது. வசீகரம் இருந்தது. ஆனால், உண்மை எவ்வளவு இருந்தது! (சிரிப்பு) ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாமா என்பதற்காகத்தான் இதை சொல்கிறேன். அவர் சொன்னார், தி.மு.க. ஆட்சியிலே அதிகமான குற்றங்கள் என்று குற்றங்களினுடைய எண்ணிக்கையைச் சொன்னார். அந்த எண்ணிக்கையை ஒரு முறை பார்ப்பது நல்லது என்றுநான் கருதுகிறேன். அந்த எண்ணிக்கை பல்லாயிரக்கணக்கில் - அளவில் வித்தியாசமானவை. அதில் சொத்து சம்பந்தமான குற்றங்கள் என்று எடுத்துக் கொண்டால், 2006 இப்போது தி.மு.க. ஆட்சியில் 17,580 குற்றங்கள், 2007, தி.மு.க. ஆட்சியில் 17,652 குற்றங்கள், ஆனால் 2002 அ.தி.மு.க. ஆட்சியில் 25,050 குற்றங்கள். 2003 அ.தி.மு.க. ஆட்சியில் 23,818 குற்றங்கள், 2004 அ.தி.மு.க. ஆட்சியில் 22,340 குற்றங்கள், 2005 அ.தி.மு.க. ஆட்சியில் 20,173 குற்றங்கள், ஒன்றும் பெரிய வித்தியாசம் இல்லை. ஆனால் வித்தியாசம் இருக்கிறது. அதை மறைத்துவிட்டு தி.மு.க. ஆட்சியிலே அது என்ன ஆயிற்று, இது என்ன ஆயிற்று என்று கேட்பதிலே பயன் இல்லை. நீங்களும் பொது மக்களுக்காகத்தான் ஆட்சி நடத்தினீர்கள், நாங்களும் பொது

*மக்களுக்காகத்தான் ஆட்சி நடத்துவதற்காக இந்தப் பொறுப்பை சுமந்து கொண்டிருக்கிறோம்.*

## யார் அதிக குற்றம் செய்தவர்கள் என வாதிடுவது எதிர்காலத்துக்கு நல்லதல்ல

*ஆனால், அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்ற நேரத்தில் நீங்கள் கண்ட பலன் என்ன? நாங்கள் கண்ட பலன் என்ன? ஆக, எண்ணிக்கை வாரியாகப் பார்த்தால் நாங்கள் நல்ல பலன் கண்டிருக்கிறோம். நீங்கள் அதிகமான குற்றங்களுக்குச் சொந்தக்காரர்களாக ஆகியிருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

Total Violent Crimes-*2002 முதல் 2007 வரையில் 2007 இப்போது தி.மு.க. ஆட்சியில் 22,969.* Violent Crimes *கொலை உட்பட. 2008 தி.மு.க. ஆட்சியில் 18,798, 2002 அ.தி.மு.க. ஆட்சியில் 28,876, 2003 அ.தி.மு.க. ஆட்சியில் 37,292, 2004 அ.தி.மு.க. ஆட்சியில் 37,492, 2005 அ.தி.மு.க. ஆட்சியில் 37,429. இப்போது நானும் பேச முடியும் அல்லவா? ஏன்? ஏன்? ஏன்? இந்த உயர்வு உங்கள் ஆட்சியிலே என்று நானும் கேட்க முடியும் அல்லவா?அதற்காகவா நாம் வாதங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம். இல்லை. இவைகள் எல்லாம் இன்னமும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இன்னமும் குறைய வேண்டும். உங்கள் ஆட்சியானாலும், எங்கள் ஆட்சியானாலும் எந்த ஆட்சியானாலும் அந்த ஆட்சியில் நாளைக்கு யாருடைய ஆட்சி இங்கே நடைபெற்றாலும், அந்த ஆட்சியிலே மக்கள் சட்டம் ஒழுங்கு, அமைதி இவைகளை பாதுகாத்து கட்டுப்பட்டு, அதற்கு அடங்கி நடப்பவர்களாக பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறா? அதுபற்றி நாம் பேசாமல் நீ அதிகம் குற்றம் செய்தாயா? நான் அதிகம் குற்றம் செய்தேனா என்று இந்த விவாதத்திலே ஈடுபடுவது எதிர்காலத்திற்கு நல்லது அல்ல. இந்த விவாதத்திற்கும் அது முத்தாய்ப்பாக அமைய முடியாது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகின்றேன்.*

*அதைப் போலவே மிகக் கொடுமையான விஷயம், கற்பழிப்பு, இது 2002-ல் அ.தி.மு.க. ஆட்சியில் 512, 2003-ல் 557, 2004-ல் 618, 2005-ல் 571, தி.மு.க ஆட்சியில் 2006-ல் இந்த 500 விவகாரமே கிடையாது. 457 தான். மானபங்கப்படுத்தியது அ.தி.மு.க. ஆட்சியில் 2002-ல் 1,866, 2003-ல் 2,022, 2004-ல் அ.தி.மு.க. ஆட்சியில் 1,861, 2005 - அ.திமு.க. ஆட்சியில் 1,764, 2006-ல் தி.மு.க. ஆட்சியில் குறைகிறது. 1,179 அறவே, குறைந்து விட்டது என்று நான் சொல்லவில்லை, மார்தட்டிக்கொள்ள வில்லை. குறையத் தொடங்கியிருக்கிறது. காவல் துறையினர் முடுக்கிவிடப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் இதற்குப் பொருள். இதைப் புரிந்து கொள்ளலாம். இதிலே ஒருவருக்கொருவர் போட்டா போட்டி, காட்டா குஸ்தி என்பதைப்போல நீங்கள் அதிகமா? நான் அதிகமா? என்று போரிட்டுக் கொள்வதிலே எந்தப் பொருளும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.*

## காவல்துறையில் உள்ள கறுப்பு ஆடுகளை எல்லோரும் சேர்ந்து ஒழிப்போம்

*பொதுவாக நம்முடைய தமிழகத்தில் நகரங்கள் என்று எடுத்துக்கொண்டாலே அதற்கு ஒரு ஒப்பீடு பார்த்தாலே ஐதரபாத்தில் 2006-ல் நடைபெற்றுள்ள கொலைகள் 193, கொள்ளைகள் 12, மொத்த குற்றங்கள் 17,295, டெல்லியில் கொலைகள் 396, கொள்ளை 12, மொத்த குற்றங்கள் 26,284 மும்பையில் கொலை 239, கொள்ளை 29, மொத்த குற்றங்கள் 31,070. ஆனால், சென்னையில் மொத்தக் கொலைகள் 131 தான். கொள்ளை 5, மொத்த குற்றங்கள் 16,168 இப்படி குற்றங்கள், களவுகள், கற்பழிப்புக்கள், கொலைகள், இவைகளெல்லாம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போதுகூட நாம் குறைவாகத்தான் இருக்கிறோம். நம்முடைய துறையினுடைய நடவடிக்கைகள் நேர்த்தியாகத்தான் இருக்கிறது. பொறுப்புணர் வோடுதான் இருக்கிறது. இருந்தாலும்கூட இன்னும் எவ்வளவுதான் நேர்மையானவர்களாக காவல் துறையினர் இருக்க வேண்டுமென்று விரும்பினாலும்கூட, அதிலும் ஒன்றிரண்டு கறுப்பு ஆடுகள் வரக்கூடும். கறுப்பு ஆடுகள் என்கின்ற வார்த்தைகூட நான் கண்டுபிடித்தது அல்ல. முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் உதிர்த்த வார்த்தைகள் கறுப்பு ஆடுகள் என்பது. அந்தக் கறுப்பு ஆடுகள் இருந்துதான் தீரும். அந்தக் கறுப்பு ஆடுகளும் ஒழிக்கப்பட வேண்டும். எல்லோரும் சேர்ந்துதான் கறுப்பு ஆடுகளை ஒழிக்க வேண்டுமேயல்லாமல், நான்*

மாத்திரம் கறுப்பு ஆடுகளை ஒழிப்பேன் என்று நான் மார்தட்டிக்கொள்வதோ, ஏன் ஒழிக்கவில்லை என்று என்னைக் கேட்பதோ சரியல்ல.

நம்முடைய நண்பர் நேற்றைக்குப் பேசும்போது சேகர்பாபு கேட்டார். அவர் இரண்டு, மூன்று கேள்விகளை என்னைப் பார்த்துக் கேட்டார். அதிலே முக்கியமாக அவர் கேட்டது. நீங்கள் நீதியரசர் சண்முகம் கமிஷனை நியமித்தீர்களே, அந்த அறிவிக்கையை இவ்வளவு நாளாகியும் வெளியிடாதது ஏன் என்று கேட்டார். நான் அவரைப் பார்த்துத் திருப்பிக் கேட்கிற கேள்வி, இவ்வளவு நாளாகியும் பத்திரிகையிலே வெளிவந்து அதை இன்னும் படிக்காதது ஏன் என்றுதான் நான் அவரைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 15.4.2008 அன்றைக்கே அரசாங்க கெசட்டில் அந்தச் செய்தி வெளியிடப்பட்டுவிட்டது. 25.4.2008 அன்று எல்லா ஏடுகளிலும் விளம்பரம் செய்யப்பட்டுவிட்டது. Tamil Nadu Government Gazette Extra ordinary என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் கெஜட்டிலும் ஒரு பத்திரிகையிலே Hindu- வில், இன்னொரு தமிழ் பத்திரிகையிலே வெளியிட வேண்டுமென்பதற்காக தினமலரில், இரண்டிலும் வெளி வந்திருக்கிறது. ஆதாரம் வேண்டுமானால் என்னுடைய கையிலே ஆங்கிலம், தமிழ் பத்திரிகையிலே வந்த அந்த விளம்பரங்கள் இருக்கின்றன. வந்திருக்கின்றன.

இன்னொன்று கேட்டார், நீங்கள் நீதி விசாரணையைப் போட்டுவிட்டு ஓர் அதிகாரியின் அலுவலகத்திற்கு அங்கே Raid செய்யலாமா என்று கேட்டார். ஆனால் உண்மை அதுவல்ல. Raid எதுவும் செய்யவில்லை. அரசால் அமைக்கப்பட்ட நீதியரசர் சண்முகம்; அவர்களுடைய கமிஷனின் சார்பில், அவர்கள் தங்களுடைய விசாரணைக்காக, லஞ்ச ஒழிப்புத் துறை அலுவலகத்திலேயிருந்த கம்ப்யூட்டரை எடுத்துச் சென்றார்கள் அவ்வளவுதான். அதற்கும் அரசுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அரசின் சார்பாக எந்த ஆர்டரும் போட்டதும் கிடையாது. அதுமாத்திரம் அல்ல, நீதியரசர் சண்முகத்தினுடைய கமிஷனின் சார்பாக அந்த அதிகாரியினுடைய அலுவலகத்திலேயிருந்த கம்ப்யூட்டரை மாத்திரமல்ல, தலைமைச் செயலாளர் திரிபாதி அவர்களுடைய அலுவலகத்தினுடைய கம்ப்யூட்டரையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள் விசாரணைக்காக. இதிலிருந்து இதிலே எந்தத் தவறும் இல்லை என்பதை மிகச் சுலபமாகப் புரிந்துகொள்ளலாம்.

கலைராஜன் பேசும்போது, கேட்டார். இப்போது வழக்கறிஞர்களும், காவல்துறையினரும் அடிக்கடி மோதிக்கொள்கிறார்களே, அது பொதுமக்களுக்கு நல்லது அல்லவே என்ற நல்ல எண்ணத்தோடு கலைராஜன் கேள்வியைக் கேட்டார். நீங்கள் வழக்கறிஞர்கள் மற்றும் காவல்துறையினருக்கிடையே நடக்கும் பல்வேறு பிரச்சினை குறித்து ஒரு தனிக்குழு அமைத்து விசாரிக்க வேண்டும் என்றார். அதுவும் காலம் கடந்து அவர் சொன்னதுதான். என்ன வேடிக்கை என்றால், இந்த அவையில் சில நண்பர்கள் நடந்தவைகளைப் பற்றிப் பிறகு கேட்கிறார்கள். அப்படித்தான் கலைராஜனும் கேட்டார். ஏற்கெனவே அந்தக் குழுவை 28.12.2006 அன்றே அமைத்து அரசாணையாக வெளியிடப்பட்டுவிட்டது.
அந்தக் குழுவிலே உயர்நீதிமன்ற நீதிபதி தலைவராகவும், அரசு தலைமை வழக்கறிஞர் தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர், காவல் துறை தலைமை இயக்குநர் (சட்டம் - ஒழுங்கு) (பொறுப்பு) அவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்தக் குழு பிரச்சினைகள் ஏற்படும்போதெல்லாம் கூடிப் பேசி தீர்வு காண வழிவகைகள் செய்து வருகிறது. கலைராஜனுடைய கவலையோடு நானும் கலந்து கொள்கிறேன். பொதுவாக வேறு யாருக்குமிடையே தகராறு என்றால் அதைத் தீர்த்துவைக்கக்கூடியவர்கள் காவலர்களும், அதற்காக வாதாடக்கூடிய வழக்கறிஞர்கள். ஆனால் வேடிக்கை என்னவென்றால், வழக்கறிஞர்களும், காவலர்களுமே மோதிக்கொள்வது நல்லதல்ல, அதற்காக ஏன் குழு போடவில்லை என்று கேட்டார். அது போட்டு ரொம்ப நாள் ஆயிற்று என்ற பதிலைத்தான் நான் கலைராஜனுக்கு சொன்னேன்.

## முல்லைக்கொம்பையில் முன்னாளில்
## நடைபெற்ற ஓர் உரையாடல்!

அவர் இன்னொரு குறை சொன்னார், நான் துப்பாக்கி லைசென்ஸ் கேட்கிறேன். ஏன் கொடுக்கவில்லை என்று. அவருக்கு ஏதாவது பயமாக இருக்கலாம். அது வேறு விஷயம், ஏனென்றால் என்னைப் பார்த்தே, என்னை நோக்கியே இந்த அவையிலே முன்வரிசை

வரையிலே வந்த கலைராஜன், துப்பாக்கி கொடுத்துவிட்டால் என்ன செய்வாரோ? யாருக்கும் தெரியாது. அதனால் சொல்லியிருக்கலாம். துப்பாக்கி எதற்கு?

நான் ஒரு முறை அறிஞர் அண்ணா அவர்களுடன் வட ஆற்காடு மாவட்டத்திற்கு சுற்றுப்பயணம் சென்று இருந்தேன். வட ஆற்காடு மாவட்டத்திலே முல்லைக் கொம்பை என்று ஒரு ஊர் நம்முடைய ஞானசேகரனுடைய சொந்த ஊர், முல்லைக் கொம்பையிலே வடிவேல், முல்லை சக்தி என்ற இரண்டு உயிர் நண்பர்கள் எனக்கு உண்டு, அந்த முல்லைக் கொம்பையிலே போய் நாங்கள் இறங்கியதும், அண்ணா அவர்கள் கட்டிலிலே படுத்துக் கொண்டார். நாங்கள் தாழ்வாரத்திலே சென்று முல்லை சக்தியோடும் வடிவேலுவிடமும் பேசிக் கொண்டு இருந்தோம். அப்போது வடிவேல் சொன்னார், இப்படி அர்த்த ராத்திரியிலே 12 மணிக்கெல்லாம் இந்த கிராமங்கள் வழியாகப் பயணம் செய்கிறீர்களே, இதெல்லாம் காடாரம் அல்லவா? ஒரு துப்பாக்கியாவது வைத்துக் கொள்ளக்கூடாதா என்று என்னைக் கேட்டனர் முல்லை, வடிவேல். எனக்கு ஏன் துப்பாக்கி. எல்லாம் வருகிறவன் கொண்டுவருவான். நமக்கு எதற்கு துப்பாக்கி? அதுதான் வருகிறவனே கொண்டுவருவான் என்று சொன்னேன். (சிரிப்பு) நமக்கு எதற்கு துப்பாக்கி, வருகிறவனே கொண்டுவருவான் என்றுதான் நான் நம்முடைய கலைராஜனுக்கு சொல்லிக்கொள்கிறேன். (பலத்த சிரிப்பு) நான் அவரை குறைத்து மதிப்பிடவில்லை. வருகிறவனே கொண்டுவருவான், அதைப் பிடுங்கி அவர் சுடலாம் அல்லவா? அதற்காகச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான், போலீசார் நம்மைப் பற்றி, பொதுமக்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும் என்று சொல்கிற அதேநேரத்தில், போலீஸ் துறையிலே இருக்கின்றவர்களைப் பற்றியும் நாம் கவலைப்படவேண்டும். அவர்களும் அரசு ஊழியர்களைப் போல, ஆசிரியர்களைப் போல, நம்மவர்கள் என்ற நிலையில் நமக்கு நண்பர்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான், திகழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான். அதைத்தான் 1962ஆம் ஆண்டிலேயே நான் இதே அவையிலே, அப்போது முதலமைச்சராக திரு. பக்தவத்சலம் இருந்தபோது நான் எழுதிய உதயசூரியன் நாடகத்தை ஏன் தடை செய்தீர்கள் என்று கேட்டபோது, நீங்கள் போலீஸ்காரர்களை தூண்டிவிட்டு அவர்களுக்கு சம்பளம் போதவில்லை என்றெல்லாம் சொல்லி அவர்களை தூண்டிவிட்டு நாடகம் எழுதியிருந்தீர்கள். ஆகவேதான் தடை செய்தேன் என்று சொன்னார்கள். நாடகத்தைத் தடுத்து நிறுத்திவிட்டீர்கள். அதில் என்ன எழுதியிருந்தேன் தெரியுமா என்று சொல்லி, அதில் எழுதியதை முழுவதும் இந்த அவையிலே அவருக்கு நேராக இந்த அவையிலே அன்றைக்குச் சொன்னேன். அதைத்தான் நேற்று உதயசூரியன் பாடிக் காட்டினார். ஆனால், அதனுடைய விளைவு ஒன்றும் வீண்போகவில்லை. 1962ல் உதயசூரியன் நாடகம் தமிழகத்திலே நான் நடித்து, நடைபெற்ற அந்த காலகட்டத்தில் தொடர்ந்து இதே அவையில் நான் பேசும்போதே குறிப்பிட்டேன், 85 ரூபாயிலே தொடங்கி, ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் மாத்திரம் உயர்வு பெற்று, 70 ரூபாய் அளவுக்கு வந்தபின்னால்,

இரண்டு ரூபாய் அளவிற்கு ஆண்டுதோறும் உயர்வு பெற்று, கடைசியில் 90 ரூபாய் வரையிலும் போலீசார் சம்பளம் வாங்கினார்கள். இவ்விதம் 90 ரூபாய் சம்பளம் பெறுவதற்கு 15 ஆண்டு வரையில் அவர்கள் சேவை செய்தார்கள் என்ற நிலையில் இருக்கிறார்கள். இந்த அடிப்படைச் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று நான் அன்றைக்குப் பேச்சிலே வற்புறுத்தினேன். அதற்குப் பிறகுதான் ஆட்சி மாறிற்று. 1967லே தி.மு.க. ஆட்சி வந்தது. எங்களை ஆளாக்கி வளர்த்த அண்ணா மறைந்த பிறகு, அவர் விட்டுச் சென்ற பொறுப்பை, முதல்வர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். ஏற்றுக்கொண்டவுடன் இந்தியாவிலேயே முதல் தடவையாக போலீசாருடைய துயரங்களை ஆராய்ந்து, நிவர்த்தி செய்ய முதல் போலீஸ் கமிஷனை திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் அமைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி அமைத்த பிறகு, அவர்களுடைய ஊதியம், பிற சலுகைகள் அனைத்தும் உயர்வதற்கு அந்தக் கமிஷன் மூலமாக பல பரிந்துரைகள் வழங்கப்பட்டன. அந்தப் பரிந்துரைகளையெல்லாம் நாங்கள் ஏற்ற காரணத்தால், தி.மு.கழக அரசு ஏற்ற காரணத்தால், அவர்களுக்கு என்ன ஆதாயம் தெரியுமா? அவர்களுடைய படிப்படியாக சம்பள அளவில் உயர்ந்தது. 2.10.1970க்கு முன்பு ஒரு காவலருடைய ஊதியம், முதல் ஊதியக் குழுவிற்குப் பிறகு எந்த அளவிற்குப் பெருகுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

*2.10.1970க்கு முன்பு 70 ரூபாயிலே தொடங்கி 95 ரூபாய் வரையிலே மாத ஊதியம், காவலர்களுக்கு, முதல் ஊதியக் குழுவிற்குப் பிறகு 150 ரூபாயிலே தொடங்கி 225 ரூபாய். இப்படி படிப்படியாக உயர்ந்து, இன்றைக்கு நாம் எல்லாம் மகிழத்தக்க அளவிற்கு, அவர்களும் மகிழ்ச்சியிலே ஆழ்ந்திருக்கின்ற அளவிற்கு, இன்னும் மகிழப்போகின்ற அளவிற்கு இன்றைக்கு அவர்களுடைய மொத்த ஊதியம் 9,413 ரூபாய், (மேசையைத் தட்டும் ஒலி) நான் இதை இந்த அவையிலே பேசியபொழுது 70 ரூபாய். இதே அவைக்கு நான் மீண்டும் வந்து, பதில் தெரிவிப்பேன் என்று நான் அப்போது எண்ணியதில்லை. ஆனால், எப்படியோ அந்த எண்ணம் நிறைவேறி, இன்றைக்குச் சொல்லுகிறேன் 70 ரூபாயாக இருந்த ஊதியம் 9,413ஆக மாறியிருக்கிறது. தலைமைக் காவலருக்கு 90-2-110 என்று இருந்த ஊதியம் இப்பொழுது 12,415 ரூபாய். எஸ்.ஐ.க்கு 140-5-220 என்று இருந்த ஊதியம் 300-15-420-20-500 என்று படிப்படியாக உயர்ந்து இப்போது 16,684 ரூபாய், இன்ஸ்பெக்டர்கள் 225-375 என்று இருந்த ஊதியம் இப்பொழுது 20,832 ரூபாய் என்று மாறியிருக்கிறது. இன்னும் 6வது ஊதியக் குழு வந்தால் இதைவிட உயரும் என்ற நம்பிக்கையும், மகிழ்ச்சியும் நமக்கெல்லாம் இன்றைக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*ஒரு பெரிய குற்றச்சாட்டை இறுதியாக எதிர்க்கட்சி சார்பில் பேசிய நம்முடைய பொள்ளாச்சி நண்பர் இங்கே குறிப்பிட்டார். எதிர்க்கட்சித் தலைவருக்குப் பாதுகாப்பே கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். கொடுத்த பாதுகாப்பு போதுமானதல்ல என்றும் குறைபட்டார். அவர்கள் இப்பொழுது நீதிமன்றத்திற்குச் சென்று பாதுகாப்பை மேலும் பெருக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் நாம் கொடுத்துள்ள பாதுகாப்பு குறைவானதா என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

## ஒவ்வொரு வகையான பாதுகாப்புக்கும்
## மத்திய அரசு வகுத்துள்ள ஆணைகள்!

*முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், அவர்* Z Plus *பாதுகாப்புப் பெறத் தகுதியுடையவர், மறுக்கவில்லை. மத்திய அரசு ஒவ்வொரு வகையான பாதுகாப்பு நிலைக்கும் என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று விரிவாக மாநில அரசுகளுக்கு ஆணை வழங்கியுள்ளது. அந்த அடிப்படையிலே ஒரு துளியும் குறையாமல் முன்னாள் முதலமைச்சருக்கு எந்தவிதமான குறைபாடும் இல்லாமல், மேலும் சொல்லப்போனால் மத்திய அரசு கூறியிருக்கும் பாதுகாப்பு வசதிகளைவிட கூடுதலாகத்தான் இந்த அரசால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன பாதுகாப்பிற்காக. இது சம்பந்தமாக முன்னாள் முதலமைச்சர் அவர்கள் உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசுக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளார். அந்த வழக்கில் குறிப்பாக அவர் தனது வீட்டைச் சுற்றிலும்* closed circuit T.V., *அவர் பயணம் செய்யும்போது* Jammer *வாகனம், ஒரு ஆம்புலன்ஸ் வண்டி வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.* Z Plus *பிரிவில் பாதுகாப்பைப் பெறுபவர்களுக்கு இந்த மூன்றும் தரப்படவேண்டுமென்று மத்திய அரசின் ஆணையில் குறிப்பிடவில்லை. மேலும் அவர்களுக்கு அரசின் சார்பில் வழங்கப்படும் அனைத்து வண்டிகளும் பெட்ரோல் வாகனங்களாக இருக்க வேண்டுமென்றும், டீசல் வண்டியே அனுப்பக்கூடாது என்றும் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்து, அதை திட்டவட்டமாகத் தெரிவித்தார். அவர் பயணம் செய்வதற்காக குண்டு துளைக்காத கார் ஒன்று வேண்டுமென்று கேட்டார். எனக்கு எந்த வகையான, முதலமைச்சருக்கு குண்டு துளைக்காத கார் அரசின் சார்பில் தரப்பட்டிருக்கிறதோ அதேபோன்ற ஒரு கார் அவருக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் அதைப் பயன்படுத்துவதில்லை.*

## எது சட்டத்திற்கு உட்பட்டதோ
## அதைத்தான் நாம் செய்ய முடியும்!

*மேலும் அவர் தன்னுடைய பாதுகாப்பிற்காக எந்தெந்த அதிகாரிகளை வேண்டுமென்று கேட்டாரோ அவர்கள் எல்லாம் அனுப்பப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வை செய்ய ஓய்வு பெற்ற காவல்துறைத் தலைவர் மற்றும் இரண்டு அதிகாரிகளைக் கொண்ட, மூன்று பேர் கொண்ட குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்றும் அவர் தொடுத்த வழக்கிலே சொல்லியிருக்கிறார். இவையெல்லாம் மத்திய அரசால் நமக்கு*

அனுப்பப்பட்ட தாக்கீதில் இல்லாத காரணத்தால் நாம் நீதிமன்றத்திற்கு இந்தப் பதிலைச் சொல்லிக்கொண்டிருக்கின்றோம். நாம் அம்மையார் அவர்களுடைய பாதுகாப்பைப் பற்றி கவலைப்படாதவர்கள் அல்ல. எல்லோருடைய பாதுகாப்பிற்கும் இந்த அரசு உத்தரவாதம் அளிக்கக்கூடிய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் எது முடியுமோ அதைத்தான், எது சட்டத்திற்கு உட்பட்டதோ அதைத்தான் நாம் செய்ய முடியும் என்பதால் அதைச் செய்துகொண்டிருக்கின்றோம். இதற்கு மேலும் பாதுகாப்பு வேண்டுமென்று உயர் நீதிமன்றமோ, உச்சநீதிமன்றமோ கட்டளையிடுமேயானால் அதனைத் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் மீண்டும், மீண்டும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்வதோடு வழக்கமாக, அறிவிப்புகள் சிலவற்றை இந்த மாமன்றத்திலே வெளியிட விரும்புகின்றேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் பதிலுரையாற்றினார்